1972 டிசம்பர் 12]

ஆராய்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். வேறு சில மாத்திரைகளையும் பயன்படுத்தமுடியுமா என்ற ஆராய்ச்சியையும் மேற்கொண்டிருக்கிறார்கள். சில மருத்துவமனைகளிலே அந்த மாத்திரைகள் பயன்படுத்தப்பட்டு புள்ளிவிவரங்கள் சொல்லப் படுகின்றன. அவற்றைப்பற்றித் திட்டவட்டமாக தெரிவிக்கின்ற வாய்ப்பு இல்லை. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் 100-க்கு 100 வெற்றி, 100-க்கு 95 வெற்றி, 100-க்கு 50 வெற்றி *Proportionate success of family planning as to the various methods* என்று அந்தந்த மருந்துக்கு ஏற்ப அமைந்துவிடுகின்றன. 100-க்கு 40 அல்லது 100-க்கு 50 என்ற அளவிலே பல அமைப்பையும் Conventional contraceptives விட Vasectomy, tubectomy முறைதான் அறுவை சிகிச்சை முறைதான்—செம்மையான முறையிலே பயன் அளிக்கும் என்ற கருத்து நிலவி வருகிறது.

திரு. வீ. மலைக்கண்ணன் : ஆஸ்திரேலியாக் கண்டத்தில் ஒரு பூ இருப்பதாகவும் அதைப் பெண்கள் புசித்தால் கருத்தரிப்பதில்லை என்று சொல்லப்படுகிறதே, அதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆஸ்திரேலியாக் கண்டத்திற்கு பூவிற்காகச் செல்லத் தேவையில்லை. தமிழ்நாட்டு வேப்ப எண்ணைக்கே அந்த வகைப் பயன் இருக்கிறது. அதைப் பயன் படுத்துகிறவர்களுடைய திறமையைப் பொறுத்தது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

* 123 வினு.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை தொகுதி, அம்மூர் பேரூராட்சியில், ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அம்மூர் ஒரு பேரு ராட்சி; அதன் சுற்றுவட்டாரத்திலே நல்ல வைத்திய வசதிகள்

இல்லாத காரணத்தினால் இந்த முயற்சியை அரசு இனியாவது எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அம்மூர் பேரூராட்சியில் அது சார்ந்துள்ள வாலாஜா ஒன்றியத்தில் லாலாப் பேட்டையில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அம்மூர் பேரூராட்சியே முன்வந்து வேறு டிஸ்பென்சரி நடத்தலாம். அப்படி முன்வந்து உதவித்தொகை கேட்டால் அரசாங்கம் பரிசீலிக்கும். அம்மூரைப்போல் எத்தனையோ அம்மூர்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. எனவே ஒரேயொரு அம்மூரைப்பற்றித் தனியாகக் கவலைப்பட அரசால் இயலவில்லை.

* 124 வினா.—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், சங்கராபுரம் பிரதம சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(அ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு கொண்டு வரப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி வட்டம் சங்கராபுரம் ஒரு சென்டரான இடமாக இருப்பதால் அதைச் சுற்றிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. இப்பொழுது அமைச்சரவர்கள் சொன்னார்கள், அங்கு பிரதம சுகாதார நிலையத்திற்குப் பதில் அரசாங்க மருத்துவமனை திறக்கும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அங்குள்ள கிராம மக்கள் எந்த அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் அதிகம் எடுத்துச் சொல்வதற்கில்லை. ஏனென்றால் மீண்டும் இந்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து அந்த சென்டருக்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே ஏற்பட்ட கருத்து வேற்றுமை கேள்வி கேட்ட முறையில் தோன்றியதாகும். கேள்வியில் சங்கராபுரம் பிரதம சுகாதார நிலையம் என்று